A.—

The erection of an up-to-date oil fired tunnel kiln purchased from a West German firm through their Indian agents at Bombay for the Ceramic Factory at Vridhachalam was completed on 20th March 1968 under the supervision of the German Expert. The trial run was started on 21st March 1968 and the kiln was formally inaugurated on 10th June 1968.

விருத்தாசலத்திலுள்ள மட்பாண்டத் தொழிற்சாலைக்காக புதிய முறையில் சுரங்கக் காளவாய் ஒன்றை அமைக்கும் பணி ஜெர்மானிய வல்லுநர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் 20—3—1968 அன்று நிறைவெய்தியது. இக்காளவாய்க்குத் தேவைப்படும் எரிபொருள் எண்ணெய், இது மேற்கு ஜெர்மனி நிறுவனத்திடமிருந்து பம்பாயிலுள்ள அதன் இந்திய முகவர் மூலம் விலைக்கு வாங்கப்பட்டது. இந்தக் காளவாய் 21—3—1968-ல் வெள்ளோட்டம் விட்டு சோதித்துப் பார்க்கப்பட்டது. 10—6—1968-ல் இக்காளவாய் முறைப்படித் தொடங்கி வைக்கப்பட்டது.

[குறிப்பு.—ஓா உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினர்களால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்

(அ) கூட்டுறவுத்துறை அமைச்சர் விடையளிக்க விஞக்கள் வைக்கப்படாமை.

திரு. ரா. ராமச்சந்திர துரை:—பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவாவர்களே, இந்த அமைச்சரவையில் நான்கு புதிய மந்திரிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அமைச்சர்களில் மூன்று அமைச்சர்களுக்குக் கேள்விகள் கொடுக்கப்பட்டு அவர்கள் அதற்குப் பதில் கூறி வருகிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆதித்தன் அவர்களுக்கு எந்தக் கேள்வியும் வைக்கப்படவில்லை. என்ன காரணத்திற்காக அவர்களுக்குக் கேள்விகள் கொடுக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கங்கள் கேட்கிறீர்கள். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. ஒரு நாளைக்கு எத்தனை கேள்விகளை இந்தப் பேரவைக்குக் கொண்டு வர வேண்டும். எந்தெந்த அமைச்சர்களுக்கான கேள்விகளைக் கொண்டுவர வேண்டும் என்பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்வார். ஆகவே. இது பேரவைத் தலைவரால் முடிவு செய்யப்பட்டு வருகின்ற காரணத்தினால் இதில் எந்தவிதமான முறை கேடும் ஏற்படவில்லை. ஒரு அமைச்சருக்குக் கேள்விகள் இல்லையென்றால் அவருக்கு உரிய கேள்விகள் வராமல் இருந்திருக்கலாம், அல்லது கேள்விக்குரிய விடைகள் இலாக்காவிலிருந்து வராமலிருந்திருக்கலாம். அதனால் கேள்விகள் வராமலிருக்கலாம். அப்படி உறுப்பினர் ஏதாவது கேள்விகளை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருக்குக் கேட்டிருந்து அது இந்த அவைக்கு வரவில்லை என்றால் அதைப்பற்றி என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டும். எனவே, இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தாங்கள் அளித்த தீர்ப்புக்கு எதிராகக் கூறுவதாகக் கிடையாது. அவர்களுடைய பெருமையை இங்கே தெரியப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்குமே என்ற காரணத்தினால்தான் கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அவர்களுடைய பதில்களை எதிர்பார்ப்பதிலிருந்து அவருடைய பெருமை உயர்ந்திருக்கிறது என்பது எங்கள் கருத்து.